# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 15324 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.**

முன்னிலை : திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் : திரு. பெ. அழகர்சாமித்தேவர்,
த/பெ. கோடாங்கி பெரிய கருப்பத்தேவர்,
ஈகிள் டெய்லர் பில்டிங்,
நாடார் புதுத்தெரு,
உசிலம்பட்டி – 625 532.

பொது அதிகார அமைப்பு : பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம்.

------

மனுதாரர் திரு.பெ. அழகர்சாமித்தேவர் சார்பாக அவரது வழக்கறிஞர் திரு. ப்பி. இராஜேந்திரன் விசாரணைக்கு வந்திருந்தார். திரு. A. கஜேந்திரன், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 26.12.08 அன்று 12 இனங்களில் தகவல் கேட்டு பொதுத் தகவல் அலுவலரிடம் மனு செய்துள்ளார். 16.02.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். மனுதாரருக்கு 16.03.09 அன்று பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் தரப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட தகவலில் ஒரு சில தகவல்கள் விடுபட்டதாக தெரிவித்து 01.07.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் சார்பாக வந்திருந்தவர் குறிப்பிட்டு இனம் 5–க்கு முழுத் தகவல் தரப்படவில்லை என்று தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் வீட்டு மனைப் பட்டா வழங்கிய விவரம் அவ்வலுவலகத்தில் உள்ள தகவலின் அடிப்படையில் வழங்கப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரர் இதற்கு முன் 1999–ம் ஆண்டு இதே இடத்திற்கு பட்டா வழங்கப்பட்ட விவரம் தரப்படவில்லை என்று தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் சம்பந்தப்பட்ட இடத்திற்கான பட்டா 1999–ம் ஆண்டுக்கு அவ்வலுவலகத்தில் வழங்கப்படாததால் தகவல் இல்லை என்றும், மனுதாரர் குறிப்பிடும் வீட்டு மனைப் பட்டா பிற்பட்டோர் நலத் துறையில் வழங்கப்பட்டு இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இது குறித்த தகவல் வேண்டி மனுதாரர் தனியாக சம்பந்தப்பட்ட பிற்பட்டோர் நலத்துறை அலுவலரிடம் மனு செய்து பெற்றுக்கொள்ளுமாறு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இனம் 8–க்கு பொதுப் பாதை இருப்பது குறித்த தகவல் தரப்படவில்லை என்று மனுதாரர் தெரிவித்தார். மனுதாரருக்கு விசாரணையின் போது சம்பந்தப்பட்ட இடத்தின் புல வரை படம் பொதுத் தகவல் அலுவலரால் நேரிடையாக வழங்கப்பட்டது. இனம் 12–க்கு இலவசப் பட்டா வழங்கப்பட்ட விவரம் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டு இருந்தும், பிற்பட்டோர் நலத்துறையில் வழங்கப்பட்ட விவரம் இனம் 5–ல் மனுதாரர் கேட்டுள்ளதால்

அவ்விவரம் பொதுத் தகவல் அலுவலரிடம் இல்லாததால், பட்டா வழங்கப்பட்டது குறித்து சம்பந்தப்பட்ட துறைக்கு தனியாக மனு செய்து பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து இனங்களுக்கும் பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதால் முழுத் தகவலும் வழங்கப்பட்டதாக முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

**( சு. மோகன தாஸ் )**
**உதவி பதிவாளர்**

<u>வழக்கு எண். 15324/09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம்.

திரு. பெ. அழகர்சாமித்தேவர்,
த/பெ. கோடாங்கி பெரிய கருப்பத்தேவர்,
ஈகிள் டெய்லர் பில்டிங்,
நாடார் புதுத்தெரு,
உசிலம்பட்டி – 625 532.